ந.க.எண்.அ1/3646/2019

நாள் : 18.11.2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

இராமநாதபுரம் மாவட்டம்

# அறிவிக்கை (Notification)

## மண்டபம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

இராமநாதபுரம் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில், மண்டபம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் பெறும் காலியாக உள்ள 1 (ஒரு) அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### காலிப்பணியிடங்களின் விபரம்

| வ. எண் | பதவியின் பெயர் | இனசுழற்சி விபரம் | காலியாக உள்ள பணியிட எண்ணிக்கை | ஊதிய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) | 1 | ரூ.15,700-50000 (நிலை 1) |

தகுதிகள் :-

1)

| வ.எண் | இனம் | வயது (01/07/2019 அன்று) |
|---|---|---|
| 1 | பொதுப்பிரிவினர் | 30 |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிற்படுத்தப்பட்டோர் | 32 |
| 3 | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 35 |

2) கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | கல்வித் தகுதி | இதர தகுதி |
|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | மிதிவண்டி ஓட்டத்தெரிந்தவராக இருக்க வேண்டும். |

நிபந்தனைகள்:

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். (இருப்பிட சான்று தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்)

2) இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதி ஆகியவைகளற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும்

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3) ஒவ்வொரு பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் )

4) அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மண்டபம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ **02.12.2019 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் இராமநாதபுரம் மாவட்டத்தின் https://ramanathapuram.nic.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையாளர்

மண்டபம் ஊராட்சி ஒன்றியம்

(இ) உச்சிப்புளி.

# இராமநாதபுரம் மாவட்டம்
## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு
## மண்டபம் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியின் கீழ் ஊதியம் பெறும் அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்
## (விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 02.12.2019)

**குறியீடு எண்:** (அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

(பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | | புகைப்படம் (கையொப்பத்துடன்) |
| 2. | பாலினம் | ஆண்/ பெண் | |
| 3. | விண்ணப்பிக்கும் பதவி | | |
| 4. | விண்ணப்ப நாள் | | |
| 5. | விண்ணப்பிக்கும் ஒதுக்கீடு | | |
| 6. | தந்தை / கணவர் பெயர் | | |
| 7. | நிலையான முகவரி | கதவு எண்:<br>தெரு பெயர்:<br>கிராமம்:<br>அஞ்சல்:<br>மாவட்டம்:<br>பின் கோடு: | |
| 8. | விண்ணப்பதாரரின் விபரம்<br>அ) தொலைபேசி எண்<br>ஆ) கைபேசி எண்<br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 9. | பிறந்த தேதி(சான்று இணைக்கப்படவேண்டும்) | DD / MM / YYYY | |
| 10. | வயது | | |
| 11. | இனம் (பொருத்தமானவற்றை ✓ செய்யவும்) (சான்று இணைக்கப்படவேண்டும்) | General / BC / BC(M) / MBC / SC / SC(A) / ST | |
| 12. | வேலைவாய்ப்பு பதிவு விபரம் (இருப்பின்) | பதிவுஎண்:<br>பதிவுநாள்:<br>புதுப்பிக்கப்பட வேண்டிய நாள்: | |

| | | | |
|---|---|---|---|
| 13. | அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? | ஆம்/ இல்லை | |
| 14. | ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | ஆதரவற்ற விதவை (உரிய அலுவலரின் சான்று நகல் இணைக்கப்படவேண்டும்). | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | |
| | | இதர முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிடவேண்டும்) | |
| 15. | கல்வித்தகுதி (சான்று இணைக்கப்படவேண்டும்) | | |
| 16. | மதம் | இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவம் / பிற | |

| | கீழ்கண்டசான்று நகல்களை இணைத்துள்ளேன் | (பொருத்தமானவற்றை ✓செய்யவும்) |
|---|---|---|
| அ) | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | |
| ஆ) | கல்வித் தகுதிச்சான்று | |
| இ) | இருப்பிட சான்றிதழ் (தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெறப்பட வேண்டும்) | |
| ஈ) | சாதிச் சான்றிதழ் | |
| உ) | இதர தகுதிச் சான்று | |
| ஊ) | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | |
| எ) | குடும்ப அட்டை | |
| ஏ) | ஆதார் அட்டை | |

## உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள் :

விண்ணப்பதாரர்

கையொப்பம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து ______________ ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்)